கொரிந்தியர் 2 7:1

இந்த வாக்குத்தத்தங்கள் நமக்கு உண்டாயிருக்கிறபடியினாலே, மிகவும் பிரியமானவர்களே, மாம்சத்திலும் மன திலும் உள்ள எவ்வித அழுக்குகளும் நீங்க நம்மைச் சுத்திகரித்து, தெய்வபயத் தை முன்னிட்டு நமது அர்ச்சிப்பின் வே லையைப் பூரணமாய் முடிக்கக்கடவோம்.

பழமொழியாகமம் 8:13

தேவ பயந் தீமையைப் பகைக் கின்றது; நானும் அகந்தையையும், ஆங்காரத்தையும், தீய வழியையும். இரட்டிக்கிற மொழியையும் நாவை யும் அரோசிக்கின்றேன்.

பழமொழியாகமம் 22:4

அடக்கவொடுக்கத்தின் மேல் பதவி தேவபயமும், திரவியமும், மகிமையுஞ் சீவியமுமாம்.

பழமொழியாகமம் 3:7-8

உனக்குத்தானே ஞானியா யிராதே; தேவனுக்குப் பயந்து தின்மை யினின்று விலகு (உரோ.12:16). அப்பொழுது உன் திரேகத் திற்கு சுகம் இருக்கும்; உன் எலும்பு களும் நன்னீரால் இறைக்கப்படும்.

பழமொழியாகமம் 31:30

அந்தமும் பொய்யும் சௌந் தரியமும் வியர்த்தமாம்; ஆண்டவ ருக்குப் பயப்படுகிற ஸ்திரீயே புகழப் படுவாள்.

சங்கீதங்கள் 33:18

இருதயத்தில் வேதனைப்படு கிறவர்களுக்குத் துணையாக ஆண்ட வர் இருக்கிறார்; மனத்தாழ்ச்சியுள் ளவர்களை அவர் இரட்சிப்பார்.

பழமொழியாகமம் 15:16

தேவ பயத்துடன் கூடிய சொற் பப் பொருள் திருப்தியைத் தராத மிகு பொக்கிஷங்களையும் விட அதிக நலமாம்.

சங்கீதங்கள் 128:1

இப்போது இஸ்ராயேல் சொல்லத்தக்கதாவது : என் வாலப் பிராயந்துவக்கி அடிக்கடி என்னை நெருக்கினார்கள்.

உபாகமம் 13:4

நீங்கள் உங்கள் தேவனாகிய கர்த்தரானவரை மாத்திரம் பின்பற்றி அவருக்குப் பயந்தவர்களுமாய் அவருடைய கற்பனைகளை அநுசரிக்கிற வர்களுமாய் அவருடைய வாக் கியத்திற்குச் செவிகொடுக்கிறவர் களுமாய் அவருக்கு மாத்திரமே ஊழியஞ் செய்து அவரை அண்டிக் கொள்ளக் கடவீர்கள்.

பழமொழியாகமம் 1:7

தேவ பயமே ஞானத்தின் ஆதி யாம்; மதியீனர் ஞானத்தையும், போதனையையும் புறக்கணிக் கிறார்கள் (சங்.110:10; சர்வ.1:16).

உபாகமம் 10:12-13

இப்பொழுது இஸ்ராயேலே! நீ உன் தேவனாகிய கர்த்தருக்குப் பயந்து, அவருடைய மார்க்கத்தில் ஒழுகி, உன் தேவனாகிய கர்த்தரிடத் தில் அன்புகூர்ந்து உன் முழு இருதயத் தோடும், முழு ஆத்துமத்தோடும் அவரைச் சேவித்து, உனக்கு நன்றாகும்பொருட்டு, நான் இன்று உனக்குக் கற்பிக்கின்ற கர்த்தருடைய கற்பனைகளையும், ஆசாரங்களையும் நீ கைக்கொண்டு காக்க வேண்டுமென்பதையே அல்லாது உன் தேவனாகிய கர்த்தர் உன்னிடத்தில் வேறு என்னத்தைக் கேட்கிறார்?

உரோமாபுரியார் 1 13:7

ஆகையால் சகலருக்கும் செல்ல வேண்டியவைகளைச் செலுத்துங்கள்; பகுதிக்குரியவனுக்குப் பகுதி; தீர்வைக் குரியவனுக்குத் தீர்வை: அச்சத்துக்குரிய வனுக்கு அச்சம்; சங்கைக்குரியவனுக்கு சங்கை. (மத். 22:21.)

யாத்திராகமம் 1:21

மருத்துவச்சிகள் கடவுளுக்குப் பயந்தமையால், இவர் அவர்களுடைய குடும்பங்கள் தழைத்திருக்கச் செய்தார்.

பழமொழியாகமம் 15:33

தேவ பயமே ஞான போதினி; தாழ்மை மகிமைக்கு முன்செல் கின்றது.

யோபாகமம் 6:14

(உபாதிக்கப்படுகிற) தன் நேசன் பேரில் தயை பண்ணாதவன் எவனோ அவன் கர்த்தருக்குப் பயப் படாதவன்.

மலாக்கியா ஆகமம் 4:2

நமது நாமகரணத்தைப் பய பக்தியாய்ப் புசிக்கும் உங்களுக்கு நீதி யின் சூரியகிரணம் உதயமாகும்; அதின் செட்டைகளில் ஈடேற்றம் (கிடைக் கும்;) நீங்கள் கிளம்பி, கிடையினின்று புறப்பட்ட இளங்கன்றுகளெனத் துள்ளுவீர்கள் (லூக்.1:78).

சங்கீதங்கள் 112:1

பிள்ளைகளே! கர்த்தரைத் துதியுங்கள்; ஆண்டவருடைய நாமத் தைப் புகழுங்கள்.

பழமொழியாகமம் 9:10

தேவ பயமே ஞானத்தின் துவக்கம்; பரிசுத்தர்களின் சாஸ்திர மாம் விமரிசை.

சங்கப் பிரசங்கியாகமம் 12:13

இப்பிரசங்கத்தின் கடைக் கட்டுப் போதனையை எல்லோருங் கவனித்துக் கேட்கப்படவோம்; தேவனுக்குப் பயந்து அவருடைய கற்பனைகளை அநுசரித்து வரு வதே மனுஷர் யாவருஞ் சுமந்த கடமை யன்றி.

சங்கீதங்கள் 67:7

சர்வேசுரா! உமது சுதந்தர ஷஜனங்களுக்கு மனது பொருந்தி மழை யைத் தந்தீர்; இவர்களோவென்றால் மெலிந்து நொந்து போயிருந்தபோது தேவரீர் இவர்களைத் தேற்றினீர்.

சங்கீதங்கள் 111:10